1968 ஆகஸ்ட் 26]

திரு. டி. மார்டின் : எம். ஓ. கமிஷனை ஓய்வு ஊதியத்திலிருந்து கழித்து அனுப்பினுல் அவர்களுக்கு ஒரு வேளை வருத்தமாக இருக்கலாம். ஆனுல் எம். ஓ. கமிஷனை மாநில அரசே ஏற்றுக்கொண்டு அந்த ஓய்வு ஊதியத்தை ஆசிரியர்களுக்கு அனுப்பினுல் அவர்கள் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற காரணத்தினுல் எம். ஓ. மூலம் அனுப்புவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் எம். ஓ. கமிஷனை அரசு ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்பதில் ஐயப்பாடு எதுவும் இல்லை. எம்.ஓ. கமிஷனை அரசு ஏற்றுக்கொள்ள முன் வந்தால் ஏராளமான செலவாகும் என்ற காரணத்தினுல் இப்போதுள்ள நிலை நீடிக்கவேண்டுமென்ற கருத்தை நிதித் துறை தெரிவித்திருக்கிறது. முன்பு பரிசீலனையில் இருந்தது இப்போது நெருங்கி வந்திருக்கிறது. மீண்டும் அது பற்றிய விண்ணப்பங்கள் வருமானுல் யோசிக்கலாம் என்று கூறினேன். அதோடு பென்ஷன் பெறும் எல்லோருக்கும் இந்த முறை கையாளப்படவேண்டும் என்ற நிலை வந்தால் அரசுக்கு ஏராளமான செலவு ஆகும் என்ற காரணத்தை நிதித்துறை சுட்டிக்காட்டியிருக்கிறது. இதைப் பற்றிவிண்ண ப்பம் மூலம் தெரிவித்தால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

Electricity from Neyveli Lignite Corporation

*** 144 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :**

(*a*) whether a Committee of Directors of the Neyveli Lignite Corporation has requested the Madras State Electricity Board for a minimum guarantee on power off-take by the latter from Neyveli: and

(*b*) if so, the reaction by the Madras State Electricity Board on this request ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷன் அளிக்க முன் வந்துள்ள உபரி மின்சக்தி முழுவதையும் பெற்றுக்கொள்வதெனத் தமிழ் நாடு மின்சார வாரியம் ஒப்புக்கொண்டுள்ளது.

Thiru K. VINAYAKAM : Is it a fact that at present our Electricity Board is purchasing power from neighbouring States. Is it because it is not in a position to get power from Neyveli Lignite Corporation ? Will the Government give instructions to the Board that they should purchase power from outside our State only after satisfying all their needs from the Neyveli Lignite Corporation ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை அவர்கள் சொந்தத் தேவை போக உபரியாகவுள்ள மின்சாரம் முழுவதையும் நாம் ஏற்றுக்கொள்வது என்ற முடிவை எடுத்துக் கொண்டிருக்கிறேம். நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் நம் மாநிலத்தை நம்பியிருப்பதால், அதன் வளர்ச்சியில் நாம் அக்கறை கொண்டிருப்பதால் பேசின் பிரிட்ஜ், சமயநல்லூர் போன்றவற்றில் நிறுத்தி விட்டு அதில் வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற அடிப்படையில் சென்ற ஆண்டு செப்டம்பரில் 36 மெகாவாட்ஸ் வாங்கினுல் போதும் என்று எண்ணினேம். ஆனுல் 110 மெகா வாட்ஸ் வாங்கப்பட்டது. அதே போல் அக்டோபரில் 40 போதும், 110 வாங்கப்பட்டது. நவம்பரில் 50 போதும், 110 வாங்கப்பட்டது, டிஸம்பரில் 100 போதும், 110 வாங்கப்பட்டது, ஜனவரியில் 125 வேண்டும், ஆனுல் 110 தான் தரப்பட்டது, பெப்ரவரியில்

140-க்கு 130, மார்ச்சில் 180-க்கு 140 தான் கிடைத்தது. இந்த அடிப்படையில் முழுவதும் எடுத்துக்கொள்வது என்ற அடிப்படையில் இருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாத அளவிற்கு பாதுகாத்துக் கொள்ள இந்த அரசு முயன்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொருள் குறித்து வாரிற மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் போது விரிவாகப் பேச வாய்ப்பிருப்பதால் அடுத்த வினாவிற்குப் போகிறேன்.

Lease of Agricultural lands in Nilgiris district

***145 Q.—Thiru A. M. Raja : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the amount realised by Government by way of lease of agricultural lands to cultivators in the Nilgiris district during the years 1966–67 and 1967–68 ?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1966–67-ல் ரூ. 1,014.16-ம், 1967–68-ல் ரூ. 1,015·71-ம் அரசாங்கத்துக்குக் கிடைத்தன.

திரு. ஏ. எம். ராஜா : நீலகிரி மாவட்டத்தில் காப்பி, தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கு 50-ல் இருந்து 99 ஆண்டுகள் வரை நீண்ட காலத்திற்கு மிகக் குறைந்த தொகையில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன இப்போது வாழ்க்கைப் புள்ளியும், விலைவாசியும் ஏறியிருக்கின்றன. ஆகவே, இந்த நிலைமைக்கேற்ப அந்தக் குத்தகையை ஏற்ற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக விரிவான மாறுதல்களைச் செய்ய அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : நீலகிரி மாவட்டத்தில் பெரிய முதலாளிகளுக்கு குத்தகைக்கு நிலங்களை விடுவதை விட ஓரளவு மத்தியதர குடும்பங்களாகப் பார்த்து குத்தகைக்கு நிலங்களை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் ஏதாவது செய்துகொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : குத்தகைக்கு விடுவது என்பதை விட பெரும்பாலான இடங்களில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே குத்தகையால் ஏக்கருக்கு 3,000, 4,000 ரூபாய் வருவதற்குப் பதிலாக பெனல்டி என்று 20 மடங்கு போட்டாலும் மிகக் குறைவாகத் தான் வருகிறது. இத்தகைய விசித்திரமான நிலை இருந்து வருகிறது. இவைகளை எல்லாம் சீராக்குவதற்கு, ஒருமுகப்படுத்துவதற்கு இது சம்பந்தமாக ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீலகிரி மாவட்டக் கலெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதையொட்டி இது சம்பந்தமாக நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மா பா. சாரதி : நீலகிரி மாவட்டத்தில் நம் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு ஏக்கர் இருக்கின்றன ? அதிலிருந்து வரும் மொத்த வருவாய் ஆண்டுக்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசுக்குச் சொந்தமான நிலம் என்றல்ல. பெரும்பாலான ஏக்கர்கள் பட்டா செய்யப்படாமலும், சிலபல குத்தகைக்கு விடப்பட்டும் இருக்கின்றன.

திரு. ஜெ பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. அதை விவசாயிகள் ஆக்கிரமித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களிடம் அபராதம் விதித்து வசூல் செய்கிறார்கள். அதையே குத்தகைக்கு விட்டால் ஏராளமான வருமானம் சர்க்காருக்கு வரும். ஆகவே, அவைகளை குத்தகைக்கு விடும் திட்டத்தை பரவலாக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது அங்கிருந்து பெரிய எதிர்ப்பெல்லாம் வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பெரிய மாறுதல்களை இது சம்பந்தமாக ஏற்படுத்த